***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXIII Code of Criminal Procedure)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT Mannargudi***
***CC.No.137/2023 – P.W. 4 (LW- 3)***

| | |
|---|---|
| *Name* | சுதா |
| *Father/Husband's Name* | மதியழகன் |
| *Village* | ஆலத்தூர் |
| *Taluk* | *மன்னார்குடி* |
| *Religion* | |
| *Age* | *42* |

1,2,4 **எதிரிகள் ஆஜர். 3ம் எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் முன்னிலை**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 15.04.2026*

1. நான் தற்போது மேற்படி முகவரியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 செந்தில்குமார், அ.சா.2 கனிமொழி, அ.சா.3 ராதிகா மற்றும் எதிரிகள் மாதவன், ரம்யா, ரவி, இளஞ்செழியன் ஆகியோர்களை தெரியும். மேற்படி நபர்கள் அனைவரும் எனது ஊரைச்சேர்ந்தவர்கள். சுமார் 2 வருடங்களுக்கு முன்பாக தேதி, மாதம் ஞாபகமில்லை. ஒருநாள் நான் வெளியில் சென்றுவிட்டு வீட்டிற்கு இரவு தான் வந்தேன். அப்போது தெருவில் ஓரே கூட்டமாக இருந்ததது. அந்த கூட்டத்தில் போலிசாரும் இருந்தார்கள். நான் தெருக்காரர்களிடம் விசாரித்தபோது எதிரிகளுக்கும், கனிமொழி என்பவருக்கும் பிரச்சனை ஏற்பட்டதென்ற விவரம் தெரிந்துக்கொண்டேன். அதில் யாருக்கு என்ன காயம் ஏற்பட்டதென்ற விவரம் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசுத்தரப்பில் தன்னுடைய சாட்சி முந்தைய வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளிப்பதால் அவரை, இந்திய சாட்சிய சட்டப்பிரிவு 154 மற்றும் குற்றவியல் நடைமுறை சட்டப்பிரிவு 162ன் கீழ் விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. பரிசீலணைக்கு பின் விசாரணைக்கு அனுமதி வழங்கப்பட்டது).**

**அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை**

. போலிசார் விசாரணையிலும் வாக்குமூலத்திலும் செந்தில்குமார் குடும்பத்தினருக்கும், ஆஜர் எதிரிகள் குடும்பத்தினருக்கும் இடையே இடப்பிரச்சனை சம்மந்தமாக முன்விரோதம் இருந்து வருகிறது என்றும், அதனால் இருகுடும்பத்தினருக்கும் அடிக்கடி சண்டை ஏற்படும் என்றும், இந்நிலையில் கடந்த 03.04.2023-ம் தேதியன்று இரவு 7.30 மணியளவில் செந்தில்குமார் மனைவி கனிமொழி என்பவரிடம் எதிரிகள் அ.சா.1 னின் வீட்டு வாசல் முன்பாக நின்றுக்கொண்டு, அ.சா.2 ஐ கொச்சை வார்த்தைகளால் திட்டியும், அ.சா.2 ஐ இழிவாக பேசியும், வீட்டிலிருந்து வெளியே வந்த அ.சா.2 ஐ ஆஜர் எதிரிகள் முடியை பிடித்து இழுத்து கீழே தள்ளி நைட்டியை கிழித்து கையால் அடித்தார்கள் என்றும், அதை தடுக்க சென்ற அ.சா.2 னின் கணவர் அ.சா.1 செந்தில்குமாரையும் ஆஜர் எதிரிகள் கொச்சை வார்த்தைகளால் திட்டியும், கையால் அடித்தார்கள் என்றும், அதை நானும் ராதிகாவும் தடுத்தோம் என்றும், உண்மை சம்பவத்தை நேரடியாக பார்த்ததாக கூறிவிட்டு தற்சமயம் இருதரப்பினர்களும் எனக்கு தெரிந்த நபர்கள் என்ற காரணத்தினாலும், இருதரப்பினர்களிடம் பொல்லாப்பு பெறாமல் இருப்பதற்காகவும், உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

(ஒம்/-) ஆ.சீதாலெட்சுமி 15.04.2026

நீதித்துறை நடுவர் எண்.2,

மன்னார்குடி.

***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXIII Code of Criminal Procedure)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT***
***Mannargudi***
***CC.No.137/2023 – P.W. 5 (LW- 4 )***

| | |
|---|---|
| *Name* | மதியழகன் |
| *Father/Husband's Name* | நடேசன் |
| *Village* | ஆலத்தூர் |
| *Taluk* | *மன்னார்குடி* |
| *Religion* | |
| *Age* | *49* |

1,2,4 **எதிரிகள் ஆஜர். 3ம் எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் முன்னிலை**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 15.04.2026*

1. நான் தற்போது மேற்படி முகவரியில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 முதல் அ.சா.4, சாட்சி நாகராஜன், ஆஜர் எதிரிகள் மற்றும் ஆஜர் இல்லா எதிரி ரவி என்பவரை தெரியும். சாட்சி நாகராஜன் தற்போது இறந்துவிட்டார். மேற்படி நபர்கள் அனைவரும் எனது ஊரைச்சேர்ந்தவர்கள். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வைமகசரிலுள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். சாட்சி பின்னிட்டு கையொப்பம் என்னுடையதல்ல என்று கூறுகிறார். வழக்கு சம்மந்தமாக எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது. நான் கேள்விபடவும் இல்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசுத்தரப்பில் தன்னுடைய சாட்சி முந்தைய வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளிப்பதால் அவரை, இந்திய சாட்சிய சட்டப்பிரிவு 154 மற்றும் குற்றவியல் நடைமுறை சட்டப்பிரிவு 162ன் கீழ் விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. பரிசீலணைக்கு பின் விசாரணைக்கு அனுமதி வழங்கப்பட்டது).**

<u>அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை</u>

. போலிசார் விசாரணையிலும் வாக்குமூலத்திலும் கடந்த 03.04.2023-ம் தேதி இரவு 7.30 மணியளவில் ஆஜர் எதிரிகளுக்கும் வாதிக்கும் இடையே ஏற்பட்ட தகராறு காரணமாக கடந்த 05.04.2023-ம் தேதியன்று 13.30 மணியளவில் சம்பவயிடமான வாதியின் வீட்டு முன்பாக போலிசார் என் முன்னிலையிலும், நாகராஜன் முன்னிலையிலும் சம்பவயிடத்தை பார்வையிட்டு, பார்வைமகசர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்தார்கள் என்றும், அதில் நாங்கள் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்றும், போலிசார் விசாரணையில் உண்மை சம்பவத்தை கூறிவிட்டு, கையொப்பம் செய்துவிட்டு தற்சமயம் இருதரப்பினர்களும் எனது ஊர்க்காரர்கள் என்ற காரணத்தினாலும், எனக்கே தெரிந்த காரணத்தினாலும், உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(ஒம்/-) ஆ.சீதாலெட்சுமி 15.04.2026

நீதித்துறை நடுவர் எண்.2,

மன்னார்குடி.